தேசிய கைப்பணிகள் சபை - 2021
---------------------------------------

1. நிதிக்கூற்றுக்கள்
--------------------

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
----------------------------------------

தேசிய கைப்பணிகள் சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து சபையின் 2021 செப்தம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை
……………………….…………………………………

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பு
. … ……………………………………….………………........………………….

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

………………………………….

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இரக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் சபையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபையின் செயற்பட்டுள்ளதாக,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் போது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்ப்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல், மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிப்பு பொறுப்பினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல் பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்காக கணக்களிப்பு பொறுப்பினை பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது இணக்கம் செய்தல், மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்தலினை பெற்றுக்கொள்வதற்குப் போதியளவு ‘‘சிறப்பாகத் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியவசியமானதாகும்.

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ……………………………….. | …………………… | ………………….. |
| (அ) | 2013 ஆம் ஆண்டில் கைப்பணிகள் சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த சீகிரிய கிராமத்து காணி 2018 ஆம் | 2018 இல் மதிப்பீட்டுப் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு | சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுதல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டின் போது ரூபா 47,750,000 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் அச்சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | |
| (ஆ) | விற்பனை தீர்வு முறைமைகளுக்குத் தேவையான கடினப் பொருட்களுக்காக செலவு செய்யப்பட்ட ரூபா 3,010,450 பணம் மற்றும் ரூபா 15,002,191 தொகையான மூலதனச் சொத்துக்களைக் கொள்வனவு செய்தல்கள் நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்வதற்கு பதிலாக அபிவிருத்திச் செலவுகளாக வருமானத்திற்குப் பதிவழிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஆண்டிற்கான மிகையும் நமைமுறையற்ற சொத்துக்களும் அத்தொகையால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | வராகொட மட்பாண்ட பயிற்ச்சி நிலையத்தை திருத்தம் செய்தல் மற்றும் இறாக்கைகளை வழங்குதல் 2022 ஆம் ஆண்டில் மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | மூலதனச் சொத்துக்களை நிதிக்கூற்றுக்களில் சரியாகக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல்வேண்டும் |
| (இ) | இலங்கை கைத்தொழில் சபையின் மூலம் நடாத்தப்படுகின்ற கைப்பணி பயிற்சி நிலையத்தை தேசிய கைப்பணிச் சபைக்கு ஒப்படைப்பதற்காக 2008 திசெம்பர் 23 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 46,298,422 கிரயமான அந்த பொறுப்பேற்கப்பட்ட சொத்துக்கள் சபையினால் தற்பொழுது பன்படுத்தப்படுகின்றன. எவ்வாறாயினும் இச்சொத்துக்களை மீள்மதிப்புச் செய்து நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இச்சொத்துக்கள் தொடர்பாக மீள்மதிப்புச் செய்து நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | சொத்துக்களை மீள்மதிப்புச் செய்து நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கைப்பணி சபைக்குச் சொந்தமான பயிற்சி தொழில்நுட்ப நிலைங்களின் வருமானங்கள், செலவுகள் மற்றும் வங்கி மீதிகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்காததுடன் 83 நிலையங்களின் ரூபா 2,346,214 பெறுமதியான வங்கி மீதிகளை கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படாதிருந்த போதிலும் பின்னிணைப்பாக இறுதிக் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எதில்காலத்தில் இது சம்பந்தமாக பொருத்தமான வேலைத்திட்டத்தினை தயாரிப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | சபையின் கீழ் காணப்படுகின்ற நிறவனங்களின் சொத்துக்களை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |
| (உ) | இலங்கை கைத்தொழில் சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தேசிய கைப்பணிகள் சபைக்குச் செலுத்தவேண்டிய மீதி ரூபா 1,464,905 ஆக இருந்த போதிலும் சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அறவிட வேண்டிய மீதி ரூபா 2,432,122 ஆகும். எவ்வாறாயினும் இந்த வித்தியாசத்திற்கான காரணத்தை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வித்தியாசத்தை குறிப்பிட்டு மீண்டும் உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | வித்தியாசத்தை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டிற்கான மொத்த பெறுமதி ரூபா 1,972,268 தொகையான செலுத்த வேண்டிய செலவுகள், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அட்டுறு செலவுகளாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க 2021 ஆம் ஆண்டிற்கான மிகைகள் அத்தொகையால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள வவுச்சர்கள் உண்மையிலேயே 2022 ஆம் ஆண்டிலேயே கணக்குகள் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதனால் அவை அட்டுறு செலவுகளாக உள்ளடக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் தேவையான செம்மையாக்கல்கள் செய்யப்படுதல் வேண்டும். |
| (எ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் காணிகள் மற்றும் கட்டிடங்களாக ரூபா 80,947,374 தொகையான தேறிய பெறுமதி சுட்டிக்காட்டப்பட்டிருந்தும் இக்கட்டிடங்களின் | தற்பொழுது கைப்பணிகள் சபைக்குச் சொந்தமான காணிகளும் கட்டிடங்களும் தொடர்பான அறிக்கைளானது சொத்துக்களை மீள்மதிப்புச் செய்ததன் பின்னர் | காணிகளின் உரிமையை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உரிமையானது சபையிடம் காணப்படவில்லை. | சமர்ப்பிக்கப்படும். | |
| (ஏ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் 07 விடயங்களின் பெறுமதிக்கும் சொத்துக்கள் பதிவேட்டில் இவை தொடர்பாக காட்டப்பட்டிருந்த பெறுமதிக்குமிடையே ரூபா 33,417,590 வித்தியாசம் காணப்பட்டிருந்தும் அந்த வித்தியாசங்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்டகாலமாக காணப்பட்டு வரும் இந்த வித்தியாசத்திற்கான காரணம் என்ன என்பதனை ஆராய்ந்து பார்ப்பதற்கு இயலுமை இல்லாதிருந்ததனால் சொத்துக்களை மீள்மதிப்புச் செய்து அப்பெறுமதிகளின் பிரகாரம் சொத்துக்கள் பதிவேட்டினைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலையான சொத்துக்களுக்கும் துணைப்பதிவேடுகளுக்குமிடையிலான வித்தியாசத்தை இனங்கண்டு சொத்துக்களை மீள்மதிப்புச் செய்து தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்க மின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 371 (5) (ஆ) மற்றும் 2020 யூலை 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றிக்கை | செயற்பாட்டினைப் பூர்த்தி செய்து 10 நாட்களுக்குள் உப கட்டுநிதியை மீண்டும் தீர்த்துவைக்க வேண்டிய போதிலும் 2,731,640 மொத்த பெறுமதியான முற்பணங்களைத் தீர்த்து வைப்பதற்கு 20 நாட்களிலிருந்து 233 நாட்கள் வரையான காலம் எடுத்திருந்தது. | முற்பணங்களைத் தீர்த்து வைப்பதற்கு தாமதம் ஏற்படுமாகவிருந்தால் உத்தியோகத்தர்களின் சம்பளங்களை நிறுத்திவைப்பதற்கு கூட நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் உரிய சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | இச்சுற்றிக்கை யின் பிரகாரம் முற்பணங்களை ள வழங்கியதன் பின்னர் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட உடன் முற்பணங்களைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | | ஒரு முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு முன்னர் அதே நபருக்கு இன்னும் சில முற்பணங்கள் | சில அபிவிருத்திச் செயற்பாடுகள் ஒரே சமயத்தில் ஈடுபடுத்தப்படும் சந்தர்ப்பங்களின் போது | சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | தொடர்ச்சியாக ரூபா 100,000 எல்லைக்கு உட்பட்டு ஒன்றுக்கு மேற்பட்ட முற்பணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| | | ரூபா 114,890 மொத்தப் பெறுமதியான 06 முற்பணங்களுக்கான செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமையின் காரணமாக முழுமையாக மீளத் தீர்த்துவைக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு தீர்த்துவைப்பதற்கு 09 நாட்களிலிருந்து 238 நாட்கள் வரையான காலம் எடுத்திருந்தது. | முற்பணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை திட்டமிட்டவாறு மேற்கொள்வதற்கு முடியாது காலம் கடந்தமையின் காரணமாக மீண்டும் பணத்தை செலுத்த வேண்டி ஏற்பட்டது. | உரிய செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு முடியாத சந்தர்ப்பங்களில் தாமதமின்றி பணத்தை மீளப்பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றிக்கையின் 3.1 ஆம் பிரிவு | ஒவ்வொரு எரிபொருள் பரீட்சிப்பின் பின்னர் அல்லது 25,000 கிலோமீற்றர் தூரம் ஓடியதன் பின்னர் அல்லது என்ஜின் சம்பந்தமான பிரதான திருத்தங்களின் பின்னர் ஆகிய விடயங்களுக்கு மத்தியில் முதலில் ஈடுபடுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்திற்குப் பின்னர் மீண்டும் எரிபொருள் பரீட்சிக்கப்படவேண்டிய போதிலும் எந்தவொரு வாகனம் சம்பந்தமாகவும் அவ்வாறு எரிபொருள் பயன்பாடு பரீட்சிக்கப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டின் போது எரிபொருள் பயன்பாட்டினைப் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | நிதிப்பிரமாணம் 137(5), 138(8), 138(3) என்பன | கொடுப்பனவுகளை அங்கீகரித்தல், வழங்குதல் சம்பந்தப்பட்ட சந்தர்ப்பங்களின் போது அவற்றினைப் பரீட்சித்து சரியாக பெறுப்பேற்கப்பட்டுள்ள மை, கொடுப்பனவு வவுச்சர்களை சான்றுப்படுத்தும் போது வவச்சர்கள் சரியானது மற்றும் அனைத்து விபரங்களும் முழுமையானது, வவுச்சர்களுக்கு பணம் செலுத்தும் போது பணம் செலுத்துவதற்கு முன்னர் தனக்கு விசேடமாகத் தெரிந்த உடயங்கள் இருந்தால் அவற்றினை முறையாக கவனத்தில் கொள்ளுதல், போன்ற விடயங்கள் தொடர்பாக ஒவ்வொரு உத்தியோகத்தர்களும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு பெறுப்புக் கூற வேண்டிய போதிலும் அதற்கு முரணாக உரிய வழங்களையும் பெற்றுக்கொள்ளாது பணம் பெறுபவருக்கு ஒப்படைக்கப்படாத ரூபா 5,464,874 தொகையான 03 காசோலைகள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வழங்கப்பட்டு 2022 மே மாதமளவிலும் உத்தியோகத்தர்களின் பொறுப்பில் வைக்கப்பட்டிருந்தது. ரூபா 3,850,740 தொகையான காசோலை உரிய நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்து | உரிய செயற்பாடுகள் முறையாக நிறைவேற்றப்படாமை மற்றும் குறைபாடுகளின் காரணமாக காசோலைகள் வழங்கப்படவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ம் அப்பொருட்கள் இந்த அறிக்கைத் திகதி வரையும் சபைக்கு ஒப்படைக்கப்படவில்லை | | |
| (ஈ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.8. ஆம் பிரிவு | வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால்மேற்கொள்ளப்பட்ட யானை வேலிகளை நிர்மாணிக்கம் நடவடிக்கைகளுக்குத் தேவையான 379,645 போஸ்லேன் புல்னொஸ் ஸ்ரெயின் மற்றும் 39,135 ரில் இன்சுலேடர்களை கைப்பணிச் சபையின் மூலம் வழங்குவதற்கான பெறுகைக்காக ஒப்பந்தக் காரரினால் உடன்படிக்கை மீறப்படுமாயின் மதிப்பீட்டுப் பணத்தில் 5 சதவீதத்திற்கு குறையாத அளவிலான செயலாற்றல் பிணையை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் மேற்கூறிய பெறுகை சம்பந்தமாக செயலாற்றல் பிணை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஓப்பந்தக்காரரினால் செயலாற்றல் பிணையைச் சமர்ப்பிப்பதற்கு முடியாமையின் அடிப்படயில் வழங்குனருக்கு மெற்கொள்ளப்படுகின்ற அனைத்து கொடுப்பனவுகளிலிருந்தும் 10% இனை நிறுத்தி வைத்து கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.11 ஆம் பிரிவு | பூர்த்தி செய்த வேலைகளின் அடிப்படையில் பெறுமதி சேர்வரி செலுத்தவேண்டியதுடன் பெறுமதி சேர்வரி செலுத்தியதன் பின்னர் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் வரி செலுத்துதல் தொடர்பான விபரத்தை கணக்கய்வாளர் | ஏதிர்காலத்தில் உரிய அறிக்கையின் பிரதி சமர்ப்பிக்கப்படும். | பதிலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

தலைமை அதிபதிக்கான பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு தெரியப்படுத்த வேண்டிய போதிலும் பெறுமதி சேர்வரியின் விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 10,260,755 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 1,321,142 ஆகும். ஆதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 8,939,613 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு ஏனைய வருமானம் அதிகரித்தல் பணிக்கொடை செலவுகள் குறைவடைதல் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்னமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ……………………………….. | …………………… | ………………….. |
| 2020 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய 05/2020 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் மூலம் அரசாங்கத்தின் செலவுகளை தீவிரமாக கட்டுப்படுத்த வேண்டும் எனவும் முறையான நிதி முகாமைத்துவத்தையும் நிதி ஒழுக்கத்தையும் பேண வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டிருந்தும் புத்தளம், வண்ணத்தவில்லு ரால்மடு கிராம உத்தியோகத்தர் பிரிவில் 2021 சனவரி 21 ஆந் திகதி பேணப்பட்ட வணிக ரீதியான பிரம்பு பயிர்ச் செய்கை தொடர்பான அரசாங்க விழாவிற்காக ரூபா 6,206,150 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. | மூலபொருள் பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டத்தினை ஆரம்பித்து வைக்கும் பிரம்பு பயிர்செய்கை தொடர்பான தேசிய விழாவானது மேன்மைதங்கிய சனாதிபதி அவர்கள் மற்றும் பிரதம மந்திரியின் தலைமையில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டதுடன் வருடாந்த செயல்டவடிக்கை திட்டத்தில் இதற்காக ரூபா 4.00 மில்லியன் மற்றும் நாடளாவிய | அரசாங்கத்தின் செலவுகள் தீவிரமாக கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பிரசித்தப்படுத்தலினை வழங்குவதற்காக அறிக்கை ரீதியான வேலைத்திட்டத்தினை தயாரிப்பதற்கு ரூபா 2.00 மில்லியன் செலவு செய்யப்பட்டது. | |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 280,509 தொகையான செம்பு இருப்புக்கள் ரூபா 343,500 தொகையான களிமண் இருப்புக்கள், விற்பனை செய்வதற்காக கைப்பணியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 6,614,940 தொகையான இருப்பு மீதிகள் என்பன பொருள் சரிபார்ப்பு அறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மிகுதியாகவிருந்த செம்பு மற்றும் களிமண் இருப்புக்களை இறுதி இருப்பிற்கு கணக்கீடு செய்வதற்கு முடியாதிருந்தது. அதற்கிணங்க உரிய சரிசெய்தலினை மேற்கொள்வதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன் வராகொட மட்பாண்ட நிலையத்தில் அமைந்துள்ள லக்சில்ப விற்பனை நிலையத்திற்காக 2021 திசெம்பர் 31 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டதனால் விற்பனை செய்யப்பட்டிருக்கவில்லை மற்றும் பொருள் சரிபார்ப்புச் சபையின் மூலம் உறுதிப்படுத்துவதற்கு போதிய காலம் இருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான அனைத்து இருப்பும் வருடாந்த பொருள் சரிபார்ப்பிற்கு உட்படுத்தப்படுதல் வேண்டும். |

3.3 செயற்பாட்டுச் செயற்றிறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சபையின் குறிக்கோள்களுக்கு மத்தியில் கைத்தொழிலுக்கான உள்நாட்டு | பிரதேச செயலகங்களினால் திருத்தம் செய்தல் | பொருட்களை கொள்வனவு செய்வதற்கு முன்னர் |

| | | | |
|---|---|---|---|
| | மூலப்பொருட்களை அதிகப்படுத்துவதன் மூலம் கைத்தொழிலாளர்களின் உற்பத்தியை மேம்படுத்தல் பிரதான குறிக்கோளாக இருந்ததுடன் கைப்பணியாளர்களுக்கு அருமையாக உள்ள மூலப்பொருட்களை வழங்குதல் அந்த நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல் ஆகிய குறிக்கோள்களை அமுல்ப்படுத்துவதற்காக சபையினால் 2021 ஆம் ஆண்டின் போது 9 மூலப்பொருள் வங்கிகள் மாகாண ரீதியாக ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 10,566,280 தொகையான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மூலப்பொருள் வங்கியை ஸ்தாபிப்பதற்காக தேவைப்படுகின்ற கட்டிடங்களை திருத்தம் செய்ததன் பின்னர் அது தொடர்பாக இயந்திரங்கள் வழங்கப்படவேண்டிய போதிலும் 9 மூலப்பொருள் வங்கிகளுக்காக ( வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை தவிர்த்து) கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களை உரிய நிலையங்களுக்கு வழங்க முடியாது இந்த அறிக்கை திகதி வரையும் வராகொட பயிற்சி நிலையத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. | மேற்கொள்ளப்படுவதனால் அத்திருத்த வேலைகள் முடிவடைந்த உடன் அந்த உபகரணங்களை உரிய நிலையங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | அவற்றினை ஸ்தாபிப்பதற்குத் தேவையான தொடர் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டில் தேசிய கைப்பணிச் சபைக்குச் 85 பயிற்சி நிலையங்களுக்கு மத்தியில் 56 பயிற்சி நிலையங்கள் மாத்திரம் பயிற்சி கற்கை நெறிகளை அமுல்ப்படுத்தியிருந்தன. 2021 ஆம் ஆண்டில் 70 பயிற்சி கற்கைநெறிகளுக்காக ஆரம்பத்திலேயே 737 பயிலுனர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தும் 2021 செப்தம்பர் அளவில் பயிலுனர்களின் எண்ணிக்கை 350 வரை குறைவடைந்திருந்தது. அவற்றில் 27 பயிற்சி கற்கைநெறிகள் இறுதியின் போது எந்த பயிற்சி பயிலுனரையும் உருவாக்குவதற்கு சபைக்கு முடியாதிருந்தது. சபையினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 17 கைத்தொழில் பயிற்சி துறைகளுக்கு மத்தியில் 6 கற்கை நெறிகளுக்காக மாத்திரம் NVQ தகமைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் ஏனைய அமுல்ப்படுத்தப்படுகின்ற | கொரேனா தொற்று நோயின் காரணமாக பயிலுனர்களின் வருகை அதிக அளவில் குறைவடைந்திருந்தது. 2022 ஆம் ஆண்டில் அதிகளவான பயிற்சி பயிலுனர்களை உருவாக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. ஏனைய 11 கற்கை நெறிகளுக்காக NVQ யினைப் பெற்றுக்கொள்வதற்கு சபை சபை நடவடிக்கை எடுத்து வருகின்றது. 2021 ஆம் ஆண்டில் ரூபா 9 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும் கொரேனா தொற்று நோய் நிலைமையின் காரணமாக தொடர்ச்சியாக பயிற்சி | நிதி ஏற்பாட்டினை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கும் அனைத்து நிலையங்களிலும் பயிற்றுவித்தலினை செயற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கற்கைநெறிகளை NVQ மட்டத்திற்கு உயர்த்துவதற்கு சபைக்கு முடியாதிருந்தது. 2021 ஆம் ஆண்டிற்கான திருத்திய பாதீட்டின் மூலம் பயிற்சி கற்கை நெறிகளுக்குரிய பயிற்சி படிகள், மூலப்பொருட்கள், உபகரணங்கள் என்பவற்றை வழங்குவதற்காக ரூபா 9,000,000 நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் ரூபா 6,091,227 தொகையான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | கற்கை நெறிகளை நடாத்துவதற்கு முடியாதிருந்ததினால் பயிலுனர் படி மூலப்பொருள் மற்றும் உபகாரணங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.. | |

3.4 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ……………………………….. | …………………… | ………………….. |
| (அ) | இலத்திரனியல் சந்தைப்படுத்தும் முறைமையை உருவாக்கிக் கொள்வதற்காக கைப்பணிச் சபையினால் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் ரூபா 3,010,450 செலவு செய்து விற்பனை தீர்வு முறைமைகளுக்குத் தேவையான மென்பொருட்கள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. சிறீ ஜயவர்தனபுர பலகழைக்கழகத்தின் மாணவர்களால் தொடக்க மட்டதிலான இணையதளம் உருவாக்கப்பட்டிருந்தும் விற்பனைத் தீர்வு முறைமையின் மென்பொருட்களானது கடினப்பொருட்களுக்கு பொருந்தும் வகையில் தயாரிக்கப்படாமையின் காரணமாக வெளிக்காட்டும் செலவுகளை உள்ளடக்கி ரூபா 6,614,245 தொகை செலவு செய்யப்பட்டிருந்தும் சந்தைப்படுத்தும் நடவடிக்கையை வெற்றிபெறச் செய்வதற்கு முடியாதிருந்தது. | கொள்வனவு செய்யப்பட்ட விற்பனைத் தீர்வு முறைமையின் கடினப் பொருளுக்குப் பொருந்தும் வகையில் தொடக்க மட்டத்திலான மென்பொருள் உரிய நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டு அது சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதனை மேம்படுத்துதல் தற்பொழுது இடம் பெற்று வருகின்றது. | விற்பனைத் தீர்வு முறைமையின் மென்பொருட்கள் கடினப் பொருட்களுக்கு பொருந்தும் வகையில் தயாரித்து சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை வெற்றியளிக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டில் அமைச்சு நிதி ஏற்பாட்டின் கீழ் மஹாவெலி B மற்றும் L வலயங்களில் யானை வேலிக்கு அருகாமையில் சணல் பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்காக நாற்றுக்களை நடுகின்ற நடவடிக்கையானது சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. மஹாவெலி B வலயத்திற்காக ரூபா 10,805,778 செலவு செய்து 177,000 சணல் நாற்றுக்கள் | தேசிய கைப்பணிச் சபையின் மூலம் மஹவெலி B மற்றும் L வலயங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட சணல் நாற்றுக்களை பொறுப்பேற்றல் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் மூலம் இடம்பெற்றிருக்காததுடன் அந்த நாற்றுக்கள் | சிவில் பாதுகாப்புத் திணைக்களமும் சபையும் சிறந்த ஒருங்கிணைப்புடன் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| சபையினால் வழங்கப்பட்டிருந்தும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திடமிருந்து கணக்காவிற்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் 148,000 சணல் நாற்றுகள் மாத்திரம் அத்திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டது எனவும் அவற்றில் 144,000 மாத்திரம் நடுகை செய்யப்பட்டுள்ளது எனவும் மஹவெலி L வலயததிற்கான 145,000 சணல் நாற்றுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது என குறிப்பிடப்பட்டிருந்தும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் 71,800 நாற்றுக்கள் மாத்திரம் நடப்பட்டிருந்தன. ஆதற்கிணங்க ரூபா 6,754,200 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட 102,200 மிகுதி நாற்றுக்கள் சம்பந்தமான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | அனைத்தும் தேசிய கைப்பணிச் சபையின் செயற்திட்டத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரினால் பொறுப்பேற்க்கப்பட்டிருந்தது. |

3.5 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள் ,பொறிகள், மற்றும் உபகரணங்கள்

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கைப்பணிச் சபைக்குச் சொந்தமான 1.1165 ஹெக்டெயர் பரப்பளவான காணியில் 18 வேலைத் தளங்கள், ஒரு காட்சிக் கூடம், அலுவலக கட்டிடம், ஒரு விடுதி, சுகாதார வசதிகளுக்கான ஒரு கட்டிடம் என்பவற்றை உள்ளடக்கிய சீகிரிய கைத்தொழில் கிராமம் ரூபா 47,750,000 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டு தம்புள்ள பிரதேச செயலகத்தினால் ஒப்படைப்புப் பத்திரத்தின் மூலம் 2013 ஆம் ஆண்டின் போது கைப்பணிச் சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2021 மார்ச் மாதம் வரை கொவிட் தொற்று நோயின் காரணமாக அனைத்து கொட்டில்களும் மூடப்பட்டிருந்தன. விற்பனை கொட்டில்கள், கட்டிடங்கள் என்பவற்றை மீளத் தயார்படுத்தி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாதாரர்களை கவரும் வகையில் தயாரித்து சபைக்கு சொத்துக்களிலிருந்து உச்ச அளவு பயன்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் ரூபா | கிராமங்களில் காணப்படுகின்ற விற்பனை நிலையங்களை அரசாங்க தனியார் கூட்டு முயற்சியின் கீழ் நடாத்துவதற்குரிய நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை ஆக்கபூர்வமான முதலீட்டிற்காக ஈடுபடுத்துதல் வேண்டும். |

47,750,000 தொகையான ஆதனம் விளைவற்றுக் காணப்பட்டன.

## 3.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| தேசிய கைப்பணிச் சபையின் 2011 திசெம்பர் 9 ஆந் திகதிய அங்கீகரித்த ஆட்சேர்ப்பு நடைமுறையின் 6.6.1 (அ) பிரிவின் இரண்டாவது பந்தியின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் தொகுதியின் II ஆம் தரத்திற்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட ஒரு உத்தியோகத்தருக்கு அத்தரத்தில் 10 ஆண்டுகள் ஆகக் குறைந்த சேவைக்காலத்தின் பின்னர் I ஆம் தரத்திற்கும் ஆட்சேர்ப்பு நடைமுறையின் சிரேஷ்ட முகாமைத்துவ சேவை தொகுதியின் 4 ஆம் பிரிவீன் பிரகாரம் I ஆம் தரத்தில் ஆகக் குறைந்தது 5 ஆண்டுகள் அனுபவத்தின் பின்னர் பணிப்பாளர் பதவிக்கு பதவியுயர்வினை பெற்றுக்கொள்ளலாம். எனினும், அதற்கு முரணாக 2009 நவம்பர் 23 ஆந் திகதி II ஆம் தரத்தில் பிரதிப் பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்ட சபையின் நிகழ்கால பணிப்பாளர் பிரதி பணிப்பாளர் பதவியில் 2012 சனவரி 1 ஆந் திகதியிலிருந்து I ஆந் தரத்திற்கும் 2015 மே 15 ஆந் திகதியிலிருந்து பணிப்பாளர் பதவிக்கு நியமனத் திகதியிலிருந்து 4 ஆண்டுகளுக்குள் பதவியுயர்வு வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக 2012 இலிருந்து 2021 வரை பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டத்தில் அமர்த்தப்பட்டிருக்கவில்லை. எனினும் 2015 இலிருந்து 2021 ஆம் ஆண்டுவரை நிர்ணயிக்கப்பட்ட தகைமையை பூர்த்தி செய்யாது பதவியுயர்வினைப் பெற்று பணிப்பாளளர் பதவிக்கு உரித்தான எரிபொருள் படியாக ரூபா 1,174,620 பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | இது தொடர்பாக தேவையான சரிசெய்தல்கள் மற்றும் விளக்கமளித்தல்கள் சம்பந்தமான ஆலோசனைகளுக்காக 2021 ஒக்தோபர் 25 ஆந் திகதிய கடிதம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அதுதொடர்பாக கிடைத்த ஆலோசனைகளின் பேரில் தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு முயற்ச்சி எடுக்கப்படும். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அறிவுறுத்தல் மற்றும் அங்கீகரித்த ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| அமைச்சு நிதியத்திற்காக தயாரிக்கப்பட்டுள்ள 2021 செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் ரூபா 192,587,697தொகையான மொத்த நிதி ஏற்பாட்டில் 45 சதவீதம் அதாவது ரூபா 88,418,841 தொகை பயிர்ச்செய்கை நிகழ்ச்சித் திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு எடுத்த காலம், கிடைக்கக்கூடிய விளைச்சல், கைப்பணியாளர்களின் தேவைப்பாடு என்பனவாக மேற்பார்வை செய்யாது இவ்வாறான பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டமானது அமைச்சு அங்கீகாரத்தினை வழங்கியிருந்தது. | சபையின் பிரதான குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்தல் மற்றும் திட்டங்களைத் தயாரித்தல் வேண்டும். |